A

உ

சிவமயம்.

திருவாவடுதுறை ஆதீனத்து,

பண்டார சந்நிதியார்

ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிகர் அவர்கள், மேற்பாடிய

# பொன் விடு தூது

இது,

திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவான்களுள் ஒருவராகிய

திரிசிரபுரம்,

வித்துவான்,

அமிர்தம், சுந்தரநாத பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று,

இந்நூலாசிரியரின் மைத்துனர், ஸ்ரீ

காட்டுப்புத்தூர்

அ. ம. நாராயணசாமி பிள்ளை அவர்களால்

அச்சிடப்பெற்றது.

Accn. No: 176022

32 pages

TRICHINOPOLY

WEDNESDAY REVIEW PRESS.

1917

அணா க. ]

176022

உ

சிவமயம்.

# பொன் விடு தூது.

## சாற்றுக்கவிகள்.

ஸ்ரீரங்கம்,
ஐஸ்கூல், தலைமைத் தமிழ்ப் புலவரும், வித்துவானுமாகிய
மகா-ள-ள-ஸ்ரீ. குரு, சுப்பிரமணிய ஐயர் அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி.

கட்டளைக் கலித்துறை.

திருவா வடுதுறை பப்பல வாணனுந் தேசிகன்மேல்
ஒருவா வெழிலுறும் பொன்விடு தூதென் றொருதமிழ்நூல்
இருவா ரிதிசுலா மாநிலத் தோங்க வியற்றினனால்
பெருவா லறிவுகொள் சுந்தர நாதப் பிரபலனே.

---

திரிசிராப்பள்ளியைச்சேர்ந்த சோழமாதேவியிலிருக்கும்
வித்துவான், மகா-ள-ள-ஸ்ரீ. அ. குப்புசாமி பிள்ளை அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்த செழுங்கமலத் துறைவானு
மாயவனுந் தேடிக் காணாக்
கார்பூத்த களமிடற்றென் மழுமறிபேர்
திருங்காத்தெம் கடவுள் மேவும்
[illegible]ர்பூத்த வெழிற்றிருவா வடுதுறையில்
[illegible]யார் பவங்கள் போக்கும்

வார்பூத்த தண்ணளியம் பலவாண
 மெய்க்குரவன் வண்மை தோன்ற.

2 சொல்லழகும் பொருளழகுந் தொடையழகு
 நடையழகுந் துகடீ ரேனைப்
பல்லழகு மொருங்கமையக் கலிவெண்பா
 வகைமையினாற் பரிந்து கற்றோர்
நல்லழகு பெறமுன்னர் நவின்றுரைத்த
 தூதினிய நலங்க ளியாவும்
வெல்லழகுற் றொளிருமொரு பொன்விடுதூ
 தெனுநூலை விளம்பி னால்

3 அன்னவன்றா னியாவனெனி லவனியெலாம்
 புகழ்ந்திடவோ ரரைகொடிக்குட்
பன்னருஞ்சீர் பெறுகவிகள் பலநவமாய்ப்
 பகரும்வலப் பண்பின் மிக்கோன்
முன்னருமைந் திலக்கணநூ லாய்ச்சங்க
 நூலறிஞர் மொழிந்த சைவத்
இன்னருணூல் முழுதுமுணர் சுந்தரநா
 தப்பெரும்பே ரியல்வல் லோனே.

---

திருச்சி, நேஷனல் ஹைஸ்கூல், தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்,
மதராஸ் யுனிவர்ஸிட்டியில் வித்துவான் பட்டம்
பெற்றவருமாகிய
மகா-ள-ள-ஸ்ரீ A. M. சடகோபராமாநுஜாசார்யர் அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி.

வெண்பா.

1 ஆயுந் திருவா வடுதுறைவாழ் அற்புருவன்
தோயுந் திகழ்ஞானத் தொல்குரவன்—நயுமுயர்
அம்பல வாணன் அருள்வண்மை தோன்றவே
இம்பரொரு நூலெழுந்த தே



2 மன்னிடுமெய் நூற்பேரை மாண்புலவீர் கேட்டிரேல்
பொன்விடுதூ தென்றே புகலுவனால்—இன்னினிய
நன்னூலை நற்றமிழால் நன்குரைத்தோ னாரென்னில்
என்னா வெடுத்திசைப்பே னிங்கு

3 சொல்லும்பொருட்டுறைகள் தோய்ந்தமைந்த நற்புலவன்
வெல்லுந் தமிழ்க்கவியின் வீறுடையான்—வல்லபுகழ்ச்
சுந்தர நாதனெனச் சூழ்ந்தெவருங் கூறவரு
பைந்தமிழ்நற் பண்டிதனாம் பார்.

---

தஞ்சை, இலக்கணவித்துவான்.
மகா-ள-ள-ஸ்ரீ மு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள்.
சாற்றிய சாற்றுக்கவி.

வெண்பா.

ஓதுந் துறைசை உபரம் பலவாணன்
மீதுண் நறவேர் விழுத்தமிழாற்—கோதுதவிர்
பொன்விடுதூ தைப்புகன்றான் பூண்சுந் தரநாத
மன்கவிவா ணன்றான் மகிழ்ந்து.

---

திரிசிரபுரம், எஸ். பி. ஜி. காலேஜ் திராவிடபாஷா
பண்டிதர்.
மகா-ள-ள-ஸ்ரீ. V S. வெங்கட்டராவ் அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

பூமேவு தலத்துளுயர் வளந்திருவா
 வடுதுறையிற் பொற்பின் மேவும்
மாமேவும் அம்பலவா ணப்பெரியோன்
 [illegible]மையுடன் மாண்புத் தோன்ற

தேமேவு பொன்விடுது தென்றெருநூல்
திகழ்தமிழாற் சிறக்கச் சொற்றான்
பாமேவு வளம்படைத்த சுந்தரநா
தக்கவிஞன் பாரின் மாதோ.

---

திரிசிரபுரம். இந்து சேவிங்ஸ் பாங்கி ஏஜண்டும், திரிசிரபுரம்
S. P. G கழகத்துத் தமிழ்ப் புலவருள் ஒருவருமாகிய
மகா-ள-ள-ஸ்ரீ T. R. இராமநாராயணப் பிள்ளை அவர்கள்.
சாற்றிய சாற்றுக்கவி

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

பொன்னிநதிப் பலவளமும் புனைந்தவா
வடுதுறையிற் பொருந்தி வாழும்
மன்னுதிருப் புகழ்படைத்த அம்பலவா
ணப்பெரியோன் மனம்பூ ரிக்க
பொன்விடுது தென்றெருநூல் பொலியச்செய்
தான்கவிஞர் புகழ்ந்து போற்றும்
சொன்மலிந்த கவிவல்லோன சுந்தரநா
தப்பெயர்கொள் சுகுணன் மாதோ.

---

மதுரை
சிவஞான தீபச் சபைத் தலைவர்
மகா-ள-ள-ஸ்ரீ. ம. அழகர்சாமிப் பிள்ளை அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி.

எண்சீர் விருத்தம்.

அங்கயிலை யிதென்ன வவனி யேத்தும்
அணிதுறைசை தழைத்தோங்க வமர்ந்த மேலோன்
பொங்கெழிலம் பலவாணப் புகழோன் றன்மேற்
பொற்பார்ந்த தமிழ்மொழியாற் பு



துங்கமிகு பொன்விடுது தொன்மைச் சொற்றான்
தொடுகடல்சூழ் மாநிலத்திற் றேன்ற நிற்கும்
இங்கிதநற் குணம்படைத்தோன் இயலோர் ஏத்தும்
எங்கள்சுந் தரநாத இயல்வல் லோனே

---

திரிசிரபுரம்,
எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதரும் சோடசத்துவய அவ
தானியாருமாகிய காலஞ்சென்ற மகாவித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ
தி. அ. சோ. இராமலிங்கம் பிள்ளை யவர்கள் குமாரரும்,
செண் ஜோசப் கலாசாலைத்தமிழ்ப்புலவரும், மருங்காபுரி
சமஸ்தான வித்துவானும், திருசிரபுரத் தமிழ்ச்சங்
கத்து உப அக்ராசனுதிபதியுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ
R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்
சாற்றிய சாற்றுக்கவி.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

1 ஓங்குபெருங் கடலனைய வொண்டமிழ்க்கு
நாயகமா யுலகம் போற்ற
தேங்குபுகழ் படைத்திடுசீர் அமிர்தகவி
யயிர்தவெங்கை யன்பா யீன்ற
பாங்குபெறுங் கவிவலவன் எஸ். பி ஜி.
காலேஜிற் பரந்த சீர்த்தி
வீங்கிடுபைந் தமிழ்ப்புலவன் விளங்கியசீ
லத்துயர்ந்தோன் விரும்பு மெய்யன்

2 கண்ணூர்தம் புரமெரித்த காதனார்
திருப்பாகம் கண்ணி காணும்
எண்ணூர்ந்த வறம்வளர்க்கு மிறைவிதிருக்
கழலினையே யிறைஞ்சி யேத்தும்
பண்ணூர்ந்த நாற்கவிஞன் சுந்தரநா
தப்புலவன் பாரின் மீது

விண்ணூர்ந்த கொடிமாடம் விரிந்தபுகழ்க்
கொடியென்ன விளங்குஞ் சீர்த்தி.

3 புண்ணியமே மலிதிருவா வடுதுறையி
லெந்நாளும் புகழுற் றோங்குங்
கண்ணியநற் றமிழ்வளர்க்குங் கருணை யாளன்
கற்பகம்போற் கரத்தான் ஞான
நண்ணியசி ரம்பலவா ணப்பெரிய
நாவலவ னயக்குஞ் சீர்த்தி
நண்ணியநற் பொன்விடுது தெனவொருநூற்
றூரணியிற் றந்தான் மாதோ.

---

ஸ்ரீவில்லிபுத்தூர், இந்து ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

மகா-௱-௱-ஸ்ரீ, ரே. அப்புவய்யங்கார் அவர்கள்

சாற்றிய சாற்றுக்கவி.

எண்சீர் விருத்தம்.

சீராரு மழுதகளி சேயாய்த் தோன்றி
சிறந்தகலை பலகற்றுப் பெத்தாச் சிப்பேர்ப்
பாராரும் புகழோன்மேற் புலவ ராற்றுப்
படைபகர்ந்து திருச்சிராப் பள்ளி மேய
பேராரும் எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தன்னில்
பேணுமியற் றமிழ்த்தலைமைப் புலமை வாய்ந்த
வோருஞ் சுந்தரநா தன்றனைப்போல்
யார்பொன்விடு தூதிசைத்தா ரிசைபெற் றாரே.



உ

சிவமயம்.

திருவாவடுதுறை ஆதீனத்து

ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிகர் அவர்கள்மேற் பாடிய

# பொன்விடு தூது.

காப்பு—வெண்பா.

மன்னு திருவா வடுதுறையில் மாண்பினமர்
பன்னம் பலவாணப் பண்ணவன்பேர்—துன்னுதமிழ்ப்
பொன்விடுதூ தைப்புகலப் போந்தெனக்கு முன்வருமே
வன்மதமா வானனத்தே வன்.

ஆறுசீர் விருத்தம். (தந்தையார் துதி.)

தந்தையாய் என்னைத் தந்து தாயினை இழந்த எற்கு
முந்தையாய் தானு மாகி முற்றிய கல்வி யூட்டிச்
சிந்தையாய் ஞான போதச் சீரெலாஞ் சிறக்கத் தந்த
எந்தையாம் அமிர்தப் பேரோன் இணையடி மறவேன் [யானே.

## நூல்.

கார்பூத்த மேனிக் கடவுட் டிருமாலின்
சீர்பூத்த வுந்தித் திசைமுகன்செய்—பேர்பூத்த
பல்படைப்பி லேசிறந்த பாரில் வருமக்கள்
நல்லநூல் தன்னை நயந்தாய்ந்து—சொல்லிமிகப்
போற்றிப் பணிந்துவக்கும் பொற்பார் கடவுளர்கள்
மாற்றின்றித் தானும் மதிச்சடையான்—ஏற்றமிகு
தேவர் தமக்கெல்லாந் தேவாகி நின்றொளிரும்
மூவர் தமக்கு முதலாவான்—பாவர்தா
5 ஆறுந் தன்னை பருச்சித்துப் பூசித்தோர்
பாறுமி யின்பப் பதமலரோன்—மாறுமி

கைத்தலத்தான் கைத்தலத்துக் காபால முங்கொண்டு
மெய்த்தலத்துப் பெண்ணை மிகவைத்தோன்—தைத்யர்
இரும்புரங்கள் மூன்று மெரிந்துபொடி யாக
அரும்புநகை செய்தருளு மண்ணல்—பெரும்பகட்டில்
ஏறுஞ் சமனை இளமுனிக்கா முன்னுதைத்த
வீறுகழல் மேவும் வியன்றாளான்—தேறுமதன்
வீம்படங்கி நீறாக மேவுநெற்றிக் கண்டிறந்த
பாம்பணைக்கு மேனிப் பருப்பதத்தான்—ஓம்புபெரு
வேள்வியிலே வந்ததொரு வெங்கட் களிறுரித்த.
நீள்வலியான் நித்தியத்தான் நீற்றொளியான்—ஆள்வகை
இக்குவல யத்திலே எல்லோரு முய்யவென [பால்
முக்கண்ணும் ஐந்தலையும் மொய்சடைசேர்—தக்கபிறை
கங்கையொடு காருங் கடும்பாம்புங் கார்க்களமும்
மங்கையொரு பாகமுமன் மாற்றியே—அங்கவொரு
மானிடமே காட்டாது மானிடமா வந்தருளி
ஊனிடமே வும்முயிர்கட் குள்ளுயிராய்த்—தானிருப்போன்
முன்னாலின் கீழிருந்து முத்திநலஞ் சொன்னாங்கு
பின்னாலின் நாளிற் பெருங்குருவாய்ச்—சொன்னாடு
தோலாடை நீத்துநனி தூயகல் லாடையுடன்
மேலா வமர்ந்துவரு மேதகையான்—காலான
மூலப் பழமறையு முற்றுமறிந் தோதரிய
சீலத் திருவுருவஞ் செய்யதலத்—தேலவரு
மக்களிரு கண்குளிர மாண்பா குளங்குளிரத்
தக்கபடிக் காணவரு தண்ணளியான்—மிக்கவயன்
மால்காணு மாண்புடையோ னானும் மாநிலத்தோர்
கால்காண வந்த கருணையினான்—வேல்போலும்
கண்ணாள் விலங்கிடத்துக் கண்ணுதலே பாணாளும்
பெண்ணாசை நீத்த பெருமையான்—பண்ணாரும்
ஓர்பதியிற் சிற்றெறும்பு முற்றுபூ சித்திடவே
சேர்பதமாச் சேகத்தைச் சேரவளித்—தோர்பதியில்
ஆனைபூ சிக்க வருளுடனே பன்னதற்கு
வானையே தந்தருளும் வள்ளல்தான்—மானையே



காட்டிநனி காட்டில்மான் கைப்படுத்துஞ் சூழ்ச்சியென
நாட்டு மனித்தவுரு நன்குகொடு—மூட்டமல
மாயையெனுங் காணற்று மாழ்கும் பசக்கடமை
தாயைநனி மானத் தடுத்தருளி—நோயை
அடையாமற் காத்திங் கருள்செய்ய வந்த
நடையாருந் துய்ய நலக்குரவன்—தொடையார்ந்த
மன்னுமூல கெங்கணுமே மாமறையு மாகமமுந்
தன்னாந் திருச்சைவத் துநெறியும்—இன்னொளியோ
டோங்கிப் பரவ வுதித்த வுயர்பெருமான்
பாங்குபெறு செந்தமிழைப் பண்டெல்லாந்—தாங்கு
பெருவிருப்பால் முச்சங்கப் பேரிறைமை பூண்டு
தருபயனைத் தந்தருளுந் தன்மை—மருவிவே
முத்தமிழைப் பாங்கா முதிர்விலக்கண் ணேவளர்க்கும்
வித்தகன் ஞான விமிர்தவன்—உத்தமமாம்
சித்தாந்த சைவஞ் சிறந்தொளிர மாநிலத்தோர்
முத்தாந்த வீதி முறைதொடர—சத்தான
தின்னதெனத் தான்காட்டி யின்பருள விந்நிலத்து
மன்னிவந்த சைவ மணிபாலன்—பன்னுலக
மக்கள் கடைத்தேற மாமாயைக் காடொழியத்
தொக்கவினை எல்லாமுந் தோற்றோடப்—புக்கபல
வாதச் சமயங்கள் வாயொழிந்து போயொழிய
ஏதமற வந்த இயற்பெருமான்—போதவுமே
சாற்றுபசி கொண்டென்று சாருமிடங் காணாது
ஏற்றுவரு பாவான ரின்பமுற—ஏற்றமிகு
நீறளித்து நீரளித்து நெய்யமைந்த நற்சுவைய
சோறளித்துச் சோர்வழித்துச் சந்தனக்—கூறளித்துக்
கண்டிகையும் பூணுங் கவினுடை யும்மளித்தே
எண்டிசையும் போற்றவமர் என்குணத்தான்—பண்புடனே
பொல்லா விருப்பும் பொருந்தா வெறுப்புமே
இல்லா முதல்வனே யென்றறியச்—சொல்லரும்
அன்பர் துதியும் அறிவில்லார் புல்லுரையும்
பொன்னிதழி போடு பொதியாவு—என்பினையும்

பூண்டமையும் பொற்பென்னப் பூண்டருளும் போதத்தான்
நீண்ட புறச்சமய நேரிருளைக்—கீண்டெழுந்த
சித்தாந்த சைவச் செழும்பரிதி யேயென்று
ஒத்தாருஞ் சொல்லு முயர்குணத்தான்—பித்தாவோ
என்றுரைத்த வாரூர் எழில்நம்பி தான்மகிழ
நன்றுபல செய்த நலமென்ன—சென்றுபல
கல்லெறிந்த சாக்கியர்க்குங் காமர் திருப்பதத்தை
புல்லுகவென் றேயருளும் பொற்பென்ன—நல்லுலகில்
வந்தடியிற் றாழ்ந்தோர் மலமறைப்பி னாற்செய்த
எந்தவழு வும்பொறுத்தே இன்பருள்வோன்—துன்புசெ[யும்
பாசத் தளையறுத்துப் பக்குவவான் மாக்கட்கு
நேசத் திருப்பதவி நேர்ந்தளிப்போன்—பேசமுனம்
ஊமைப்பெண் ணைச்செய்த உத்தமற்கு நற்குருந்தின்
மாமை நிழலிருந்து மாண்பளித்தோன்—ஆமைபோல்
ஐந்தடக்கி நின்றுதவம் ஆக்கினோ ருள்ளொளிர்வோன்
பைந்தளிர்த்தாள் பாரிற் படவந்து—முந்துபவ
வேரைக் களைந்து வியனிலையிற் கூட்டிடவே
சீரைச்செய் தேயொளிருஞ் செம்மையினான்—நேரையம்
இன்றியே நீற்றின் இயல்பெவருங் கண்டுகொள
ஒன்றவே காட்டு முரவாளன்—துன்றியே
ஆதியந்தம் ஊர்பேர் அமைசுற்றம் என்றிவைகள்
ஓதியிடற் கொண்ணா ஒருவன்றான்—நீதியொடு
எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்குமுள னென்றாலும்
உள்ளும் பலவளமு மோங்குசிந்து—வெள்ளமமை
தேயமட்டோ மண்ணுந் திகழ்விண்ணுந் திக்கனைத்தும்
தோயகட் டோங்குமியல் தொல்புகழான்—ஆய
பலகலைக்கு மோரிருப் பாவுறுநன் ஞானன்
உலகிற் சிவமதத்தை யுண்மை—இலகிடவே
நாட்டினான் சோழவள நாட்டினான் பாணனைமுன்
பாட்டினாற் பாரவிருப் பாட்டினான்—போட்டியிட்டுத்
தீபனையா வுந்தீர்ப்பான் சின்மயத்தை யேசேர்ப்பான்
தூயமறை சொற்பொருள்சேர் சுத்தருணர்—தோய



மலையானன் நேரி மலையான்சொற் காவிக்
கலையானன் ஞானக் கலையான்—உலையாவெண்
ணீற்றினான் தாள்பணிந்தார் நெஞ்சத் துறுதுயரை
யாற்றினான் காவேரி யாற்றினான்—ஏற்றத்
திருவா வடுதுறையான் றேசிகனு மன்னுந்
திருவா வடுதுறைவாழ் தேவன்—பெருமானை
மானையார் கையானை வந்திப்போ ருள்ளிருக்கை
யானையான் மும்மதநல் யானையான்—கோனைத்
தெரியார் திகழ்ஞானஞ் சேரார் செயலைப்
பரியான் றுனைவெண் பரியான்—பெரிதாம்
முடியா வெனுநோன்பும் முற்றுவிப்பான் பொய்க்குக்
கொடியானாற் காவிக் கொடியான்—படியார்
விடையார் பெருமான் வியனெறியே சோற்
குடையான் உயர்வெண் குடையான்—நடையூட்டும்
வேலையான் அன்பர் விழைந்துபுனை செஞ்சொற்பா
மாலையான் செங்கழுநீர் மாலையான்—மாலயனும்
வேண்டித் தவஞ்செய் வியனக்க மாலையான்
ஈண்டிக் கடலொலித்த திங்கென்னச்—சேண்முட்ட
மும்முரசும் வாச்சியமும் முற்றி யதிர்ந்தொலிக்கும்
செம்மைதரு கோயில்வாழ் சீருடையான்—எம்மையன்
சைவப் பயிர்தழையச் சார்தமிழு மேபாவக்
கைவந்த ஞானக் கடலாகிப்—பொய்வந்த
பொல்லாப் புறச்சமயப் புன்கானுக் கோர்நெருப்பாய்
எல்லாரு மேத்து மியற்குருவாய்—சொல்லாரும்
அம்பல வாண னணியம் பலம்விட்டே
அம்பல வாணப்பே ராரியனா—இம்பரிடை
வந்தானென் றேபுகலும் மாகீர்த்திப் பேராளன்
முந்தா ரியத்தோடு முத்தமிழும்—கந்தாத
ஆன்மிலமும் பல்கலையும் ஆகி விளக்குருவான்
ஓங்குவே தாந்த வுயர்பொருளாய்ப்—பாங்குபெறு
சித்தாந்தச் சீர்பொருளாய்ச் சேர்ந்தினி தொளிர்பெருமான்
முத்தாந்த வீதியுமா முன்னிற்போன்—உத்தமமாம்

மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்பால்
வார்த்தைசொலி யாண்டருளும் மாவள்ளல்—சீர்த்திமிகு
மாவரசர் போற்றி மகிழ்ந்தினிது கொண்டாடப்
பூவரசி னீழலமர் புண்ணியவான்—பாவருஞ்சொல்
பாராருங் கைலாய பண்பார் பரம்பரையில்
நேராரு மெய்கண்டான் நீள்வழியில்—ஏராரும்
நீணந்தி யம்பெருமான் நேர்சந் ததிதன்னில்
மாணந்தி வண்ணனெனும் வண்டேவன்—காணங்
குருநமச்சி வாய குணக்கோமான் றன்பின்
வருநலத் தேசிகரில் வல்ல—ஒருபெரிய
பண்பாருந் தேசிகனைப் பாருலகில் வந்தருள்வோன்
விண்பா ரிரண்டும் வியந்தேத்தி—எண்பார
அம்பல வாண அருட்குருவே என்றுதொழும்
நம்பரு ளானன்பால் நான்நடந்தே—செம்பதும
பாதகா ணிக்கையாய்ப் பைம்பொன்னும் நற்கனியும்
காதமேல் நாறுங் கடிமலரும்—வீதமாம்
வெள்ளிலையுங் காயும் வியன்றெங்கின் நற்பழமும்
ஒள்ளிய வாச உயர்பொருளும்—கொள்ளவே
பாதத் தருகிட்டுப் பாதம் பணிந்திடலும்
நாதத்தப் பாலாய நல்லோனும்—போதவே
என்னையெழ வின்குமுத விங்கிதவாய் தான்மலர்ந்து
பின்னையரு ணோக்கிப் பெருங்கருணை—மன்னுதிருக்
கண்ணோக்குஞ் செய்தருளிக் காப்பவமெல் லாமோட
விண்ணோக்கும் பூதி வியன்காத்தே—பண்ணோக்கும்
மெல்விரலாற் கொண்டெடுத்து மேவு முளத்தோடு
புல்லியவென் நெற்றியிலே பூசினான்—சொல்லுவதென்
அப்பொழுதே முற்பவங்கள் அத்தனையும் ஓடியதால்
அப்பரனை யல்லால் அடுத்துரைக்க—எப்பொருளுங்
காணேன் எனைக்காணேன் கண்பாய வென்மறந்தேன்
காணேன்யா னென்னதெனுங் கட்டுரையுந்—தூணேபோல்
நின்றேன் சிலநேரம் நின்றதிலை யான்கூற
இன்றேனு வென்கியலா வென்னுரையுஞ்—சென்றேய



பன்னிப் பலபுகன்றும் பாவியேனுற்றசுகம்
முன்னி யுரைக்க முடியாதே—துன்னியவென்
பிள்ளைப் பிறையணிந்த பெம்மானே முன்னூற்றால்
வெள்ளப் பெருஞ்சுகத்தை மேவுவதுந்—தொன்மைபோ
உற்றார்க்கே தோன்றும் உரைத்திட்டால் தோன்றாவே
கற்றுத்தன் கன்றைக் கனிவினொடு—உற்றடையும்
செப்பமென வந்தென் சிறுமை யகற்றியே
வெப்பகலத் தன்கழலை வெப்பவென்—தப்பமைந்த
புன்றலைமேல் வைத்துப் புரிமிந்திர ஜாலம்போல்
நின்று மறைந்தானென் நேர்கண்டேன்—ஒன்றியநற்
றேசிகனு மீற்றிருக்குந் தேவைத் தெளிவுற்றேன்
வாசிகையே கொண்டடக்கி வன்யோகில்—நாசியடி
தன்னிலே நாட்டமிட்டார் தாங்காணுந் தற்பரனை
முன்னிலே கண்டேம்பா முன்னோன்பால்—என்றுனியே
நின்று துதித்தேன் நிறைபன்பு கொண்டென்னை
நன்றங் கிருக்க நவின்றிட்டான்—நன்றமைபத்
தம்பிரா னிட்ட தனிப்பணியைச் சென்னிகொடு
அம்புதும பாதத் தருகிருந்தேன்—எம்பெருமான்
தன்கமல மொத்தொளிருந் தன்முகத்தை நாயேனின்
கண்முக மாத்திருப்பிக் கற்பமைய—உண்ணயந்து
வந்தநெற் றிற்கோதீ வாய்திறந்து செப்புகென
முந்துபெரும் பாற்கடலின் முன்னின்று—நந்துபெரும்
ஊரங் கணநீரை உண்ணவிழை ஏழைபோல்
சாரங் கனித்ததிந்த தக்கோர்கள்—கோரஞ்செய்
தன்மையினை வேண்டோம்போ தப்பாவாய் தப்பிப்போ
என்றுபுகல் செல்வம் எனியந்தேன்—என்றென்
னைமுறைப்ப தென்றிவ் வையமென்னிப் பின்னர்
தனமில் குறையாற் றமியேன்—னைமுமிலே
வந்தே னுனைநாடி வந்துன் கழல்பணிய
முந்தேய் பவமகல முற்றவுமு—வந்தேபொன்
ஆசைதனை விட்டேன்மற் றாசைதனை வைத்தேனுன்
நேசத் திருவடிக்கே நிட்சயமாய்—மாசகல

நின்பாதப் போதையே நித்தந் தொழுதிருந்தாற்
பின்வாதப் போர்நமனும் பின்னிடுவான்—முன்னாக
வந்தவனும் இன்சொல் வழங்கி எனையிரப்பான்
அந்தவுந்தி வந்த அயனுந்தான்—சிந்தித்தே
அற்றதலை போக அறுதலை நான்கினையுங்
கொற்றத் திருநகத்தாற் கொய்திடுவான்—உற்றவிவன்
சென்னியிலே நீட்டின் சினந்தென்று போயொழிவான்
அன்னையினு மிக்க அருளாளா—உன்கழலே
நாயேன் றொழுது நலத்திருக்கச் செய்தருள்க
பேயேன் பிறப்பொழிக்கும் பெம்மானே—சேயேனுஞ்
சேவகனே என்றென்று சிந்தைகொடு செப்பியே
ஆவலொடே பின்னும் அடிதொழுதேன்—பூவலயம்
உய்ய மனித்தவுரு உற்றுகந்த சோமேசா
செய்ய தமிழ்மாலை சீராருன்—மொய்புயக்கு
அன்பினாற் பாடி யடுத்தேன் அணிந்தருள்க
என்பினா லாமாலை ஏற்றாய்க்கு—இன்பினால்
ஆயவென் சொன்மாலை ஆகாதோ அத்தாவோ
தூயமறை நால்வருரை தோயிடத்து—நேயமயில்
சொல்லேற்ற நின்செவிகள் தோமிலென் புன்சொல்லும்
ஒல்லேற்கு மென்னவே யுன்னினேன்—வில்லாருஞ்
செந்தீவாய் வேள்வியிலே தேவர் தருமுணவும்
அந்தேன் மொழியுமையாள் ஆய்ந்தூட்டுஞ்—சிந்தாத
நல்லமுதங் கொண்டநீ நாடரிய ஆரறிய
கொல்விடமு நல்லுணவாக் கொண்டமையால்—பல்லரவ
கங்கணத்தாய் தீயரின கங்கணத்தாய் பூதப்பெ
ருங்கணத்தாய் நெற்றியில்வ ருங்கணத்தா—எங்கணித்தா
வேதப் பழம்பொருளே வீடருளும் வள்ளலே
சீதப் பனிமதியச் செம்முகனே—போதக்
கருந்தனத்தா ரென்னவே கல்லாத மூடர்
பொருந்தெரிந் சென்றுதமிழ் பொற்பாத்—திருந்துதொடை
எத்தனைதான் பாடிடினும் என்னே பயன்றருமோ
நத்துவிழி யில்லா நபுன்சகன்பால்—மெத்தவே



சித்தசனின் றேவியைப்போற் சிங்காரித் தோரணங்கை
ஒத்திருக்க வென்றே உதவுதலாம்—இத்தனையா
டெற்றிற்கோ என்றே யியலான செல்வவுனை
முற்றிக் கனிந்ததமிழ் மூன்றுநனி—கற்றறிந்த
வித்தகத்தா லேபாடி மேவினன்யான் பூண்டணிக
இத்தரையெ லாம்புகழும் இன்குருவே—ஒத்தபெரும்
ஞானக் கதிரே நவிலுமருட் சாகரமே
கூனற் பிறைமௌலி கூற்றடுதாள்—வானவனே
என்றே துதித்தே னிறைஞ்சினேன் கெஞ்சினேன்
நன்றேநின் பாவை நவிலுகவென்—றன்பாற்
பணித்திட்டான் ஐயன் பணிதலைமேற் கொண்டே
ணணித்தட்டாச் சீர்தனையோ டின்பா—அணித்திட்டங்
கோடாது பாடிக் குறைபகற்றக் கைகுவித்து
வாடாது வேண்டினேன் வள்ளலுந்தன்—பீடாரும்
உள்ளங் களிக்க உயர்செவிசாய்த் துக்கேட்டு
மெள்ளக் குறுநகையு மேவிடவே—தென்னுபுகழ்க்
காழ்த்ததிரு ஞானக் கருணையதுங் கண்ணோக்கை
வாழ்த்துவது போல வழங்கியே—ஆழ்த்துறுநல்
அன்போடும் ஆசி அடுத்தடுத்துக் கூறியே
நன்ஞான போதத்தை நல்கியுடன்—இன்பான
பன்னு பலநூலும் பாசத் திருமுறையும்
இன்னிய செங்கரத்தா லெற்கருளி—மன்னியவிக்
நூல்தந்தேன் நூல்வல்லாய் நன்னுணர்வோய் நீஞ்சவைதன்
பால்தந்தே யோங்குமெழிற் பாவல்லோய்—சால்புடைய
ஞானப் பொருளும் நலமார்கல் விப்பொருளும்
ஊனமில் செல்வ உயர்பொருளும்—தானடைய
எண்ணி எமையடைந்தாய் ஏற்றமிகும் இல்லறத்துக்
கொண்ணிதியும் வேண்டு முறுதியால்—நண்ணியதை
நீவிரும்பி நாடுவதும் நேரான தொன்றேயாம்
பூவிரும்பு பாவல் புலவோனே—தூவிரும்பு
செய்யகுணங் கொண்டமைந்த சீரியனே என்றென்றே
துய்யவுரை கூறித் துனிவகற்றி—உய்யவரு

பண்டார சந்நிதியாய்ப் பாரமக மேரென்னக்
கொண்டாட நின்ற குணக்கோவும்—கண்டாரப்
போதநனி கொள்கநீ பூண்க அடைகவென
ஏதமில்நற் சாலுவையும் இன்னணியும்—போதமணி
யாருமன் றந்திங் கடியேன் றமிழ்க்குவிலை
சேரவெனக் கொண்டுள் சிறந்தளித்த—சாரசன்
சீரார் முடிபொதித்த செம்பொன்னின் நாணயத்து
ஏரார் குவையே இரும்பொன்னே—பேராரும்
என்னூனே என்னுயிரே என்னுயிர்க்கு மோருயிரே
என்னூடே டின்பா யிலைந்திருக்கு—மன்னூறு
நல்லுயிரி னல்லுணர்வே நல்வாழ்வே நாயகமே
சொல்லரிய பொன்னே சுடர்த்திருவே—தொல்லுலகில்
பொன்னென்ன யாருமே போற்றிசெயும் புண்ணியமே
மன்னுந் திறலே மகிழ்வேயின்—குன்னையலால்
ஓதும் பெருந்தெய்வ மொன்றுண்டோ ஓதக்கேள்
யாது முனதருளே யாமறியப்—போதந்
தருவாய் புகழ்தருவாய் தக்கபெரு வாழ்வு
தருவாய் வளந்தருவாய் சார—வருவாய்
இருப்பாய்பின் சாற்றும லேகிடுவாய். உன்மேல்
விருப்பாய்த் தவங்கள் விழைவார்—பொருட்டேனி
உன்னைக்கண் டாலே யுளங்களித்து மெய்பொடித்துத்
தன்னைமறந் தாடுவார் தக்கோயே—உன்னைமறந்
தாரிருப்பா ரந்தோ அரியவுனைத் தான்மறந்த
பேரிருந்தா ராலும் பேர்பிணமே—நேரிருந்த
இவ்வுலகும் எவ்வுலகும் இன்பப் பெருநிதியே
செவ்வியநின் நல்லுருவே சிந்திக்கும்—எவ்வகையும்
நின்வருகை கோரியே நீடவங்கள் செய்யுமால்
பொன்வருகை யென்றுற் புகலுவதென்—முன்னதற்கே
ஏதொப்பாம் இன்ப எழிலுருவே என்கண்ணே
ஏதொப்போம் மாதப்பா மென்றுவரும்—போதொப்பா
துன்னையுமே தள்ளுவோர் உண்டுகொலோ எவ்வுயிர்க்கு
மன்னை யுனை யன்றி யாராவார்—மன்னுபல



அண்டங்க ளோடே யனைத்துயிரு நீபடைத்தாய்
எண்டங்க வென்றிட்டா லென்பிழையோ—பண்டங்க
உந்திவரும் வேதாவி னெண்படைப் பென்றன்றே
முற்றெவருங் கூறு முறைபெனிலோ—விந்தையிதென்
அந்தமலர் வேதா அரியுந்தி வந்தாலும்
விந்தைப்பொன் கர்ப்பனென வின்னுவதைச்—சிந்தையுறக்
கேட்டிலையோ நாட்டினிலே கேடின்றி யப்பிரமன்
நாட்டு பலபடைப்பு நல்லோயே—தேட்டமுறு
முன்னருளைப் பெற்றன்றோ உண்மைபெற நாட்டுகின்றான்
பின்னுமுரை பேசிடிலோ பேரான—உன்னருளை
வேண்டிமால் மார்பகத்தே மேவ வுனைச்சுமந்து
நீண்டிங் கிருக்கின்றான் நோக—காண்டகுநற்
பூணு முடையும் பொருந்துநீ யாகவே
காணும் படியே கனிலுகின்றான்—தோணும்பொற்
பேரோனை முன்னாள் பெருந்தூணி லேதோன்றி
நேரோடு கொன்ற நிகழ்ச்சியும்—சீரோடும்
உன்பேர் கலந்த ஒருபே ரவன்கொண்ட
தன்மே லெழுந்த தனிப்பகையே—இன்பான
மூவர்தே வர்க்கும் முதலான மூர்த்தியுமே
தேவர் கனிகூரத் தித்தாவென்—றுவலொடும்
அம்பலத்தி லாடியது மம்மேயுன் பொன்மயமா
அம்பலமே வும்மழகா லன்றுகொலோ—கம்பமத
யானையுரி போர்த்தவொரு யானைமுகன் றந்தையுமுன்
றேனையிக ரின்னருளைச் சேரவிலா—தேனைபோ
என்பரவு பூண்டெங்கு மேற்றுத் திரிகின்றான்
மின்பரவு வெற்பின் விமலையோ—நின்பரவு
பொன்மணியென் றேத்தும் புகழுருப்பாற் செப்பணியால்
இன்பமுறு நல்லெழில்கொண் டெவ்வுலகும்—பொன்பரவு
சுந்தரியென் றோதச் சுருதிமுடி மேவுகின்றாள்
சந்தநில மூங்காவும் இன்செய்பு—நந்தாத
மனையு மாடு மதிகோ புரமும்
வனைமாட கூடங்கள் மற்றும்—நினைபலவாக்

கட்டிடங்க ளோடு கவினுமனைத் தட்டுமுட்டு
பெட்டி பெருங்கலங்கள் பேசுமுடை—ஒட்டியபல்
தானியங்க ளாயுதங்கள் தக்க நவமணிகள்
மேனிமயப் பல்பூண்கள் மேதக்க—மாநிலத்தோர்
கொண்டநவ லோகங்கள் கூறுசம் பாரங்கள்
கண்டபல வாச்சியங்கள் கற்பமைந்த—எண்டருபன்
னூற்குவைகள் வாகனங்கள் நுண்ணுணர்பு கொண்டிலை
தாற்பொலியும் யந்திரங்கள் ஆளடிமை—சாற்றுயிர்கள் [ந்த
எல்லாந் திருப்பொன்னே இன்னினிய உன்பேத
பல்லா ருருப்பாய்ப் பகர்ந்திடுவார்—நல்லசெப்பு
நாணயமும் வொள்வெள்ளி நாணயமும் நற்றங்க
நாணயமும் பத்திரத்தார் நாணயமும்—நாணயஞ்செய்
உண்டியலுஞ் செக்கும் உயர்நோட்டும் ஓதுகடன்
கொண்டெழுது பத்திரமுங் கூறுபல—கொண்டியலும்
இன்னவகை நற்றொகைக ளெய்தியிறை யின்றியுயர்
தன்னுமுயர் தான்களுமுன் சத்தவுரு—வென்றிடுவர்
நன்றுப வுன்னுருவ நாளுமே தங்கூற
என்றுற் பலநா இருந்தாலும்—ஒன்றுதே
உன்பெருமை யெல்லா முரைக்கவினி யார்தாமே
என்சிறுமை கொண்டுரைத்தா லேற்குமோ—புன்சிறுகண்
கொண்டேர்வ தம்முலைக் கூர்த்தொரு வாரணக்கும்
தண்டா துரையானத் தன்மையனே—பண்டாம்பல்
பேர்கொள் செழுந்திருவே பேசரிய ஓவியமே
சீர்கொள் ளருத்தமே செம்பொலமே—ஏர்கொண்ட
சாமியே பீதமே சாற்றுருவ வாசையே
பூமியேத் தம்பெரிய பூரியே—வாமியே
பெட்டிச் சிமிழடங்கும் போரான வேங்கையே
மட்டில் கனகமே மாண்பொருளே—ஒட்டுரையே
தங்கமே சாரியே சந்திரமே பத்தமே
பொங்கமாம் வித்தமே பூண்ணிதியே—இங்கெவருஞ்
சாற்றும் இரணியமே தக்கதிரு ஏமமே
போற்றுந் திரவியமே பூதலத்தும்—மேற்றலத்தும்



யாரும் வெறுக்காத யானர் வெறுக்கையே
நேருனத்தி லன்பால் நினைந்துருகிச்—சேருடனே
எத்தேவை யும்புகழ எண்ணிற்பொன் னேமணியே
வித்தேயென் றெங்கும் விளம்புநே—இத்தே
தொழுமுறையாத் தேவையெலாந் தொல்லுலகில் நீயே
வழுவிலதா வாக்குவிப்பாய் வன்னை—முழுமவர்தம்
நல்லுருவு முன்னுருவே நாடுகோ யில்தனையும்
சொல்லுருவ மாகவே சூழ்ந்தநீ—கல்லியலிற்
கட்டுவிப்பாய் அம்மே கனத்ததிருப் பூசைகளும்
மட்டில் விழாவும் வயங்குவிப்பாய்—ஒட்டியே
நீயில்லையேல் நாடில்லை நேயநல் லூருமில்லை
மீயியலுங் கோயிலில்லை மேதக்க—தாயியலும்
தேவில்லை பூசையில்லை தேட்டவிழாத் தானுமில்லை
ஓவிலெமை நத்தயியே ஒண்ணிதியே—நாவியைந்த
சட்டவட்டப் பேச்சில்லை சவ்வாதுப் பூச்சில்லை
கட்டுவர்க்கங் கட்டுமெழிற் காட்சியில்லை—இட்டு
மருட்டும் அணியில்லை வண்ணநடை யில்லை
உருட்டுப் புரட்டில்லை ஊரிற்—திருட்டுமில்லை
ஆட்டில்லை பாட்டில்லை ஆளடிமை தானில்லை
நீட்டு நெளிப்பில்லை நேரான—கூட்டில்லை
போட்டியில்லை போரில்லை போக்கு வரத்தில்லை
நாட்டமருந் தில்லை நலமில்லை—கேட்டிசெங்
கீதமில்லை வேதமில்லை மின்னார நாதமில்லை
போதமில்லை பொற்பில்லை புத்தியில்லை—வீதப்
படிப்பில்லை பாடில்லை பற்றில்லை கொண்டை
முடிப்பில்லை மென்பூ முடிப்பு—நடிப்புமில்லை.
ஊணில்லை ஓது முறக்கமில்லை ஊற்றமில்லை
காணிலொன் றும்மின்றிக் காணுமே—பேணிநீ
வந்திட்டால் நாடு வளம்பொலியு நன்னகர்சேர்
முந்திட்டே நிற்கும் மொழிபொன்னே—கொந்திட்ட
சோலைகளுஞ் சாலைகளுஞ் சொர்ணநெடு வீடுகளும்
வேலையமை செய்யதிரு வீதிகளும்—ஆலயங்கள்

மாடகூ டங்கள் மதிகோ புரங்களுமே
நீடவே கூடி நிழல்செய்யும்—நாடியே
நித்தந் திருவிழா நேயத் திருமணங்கள்
ஒத்த பெருவிருந்து மொண்கூத்துஞ்—சித்தமகிழ்
ஆட்டும்பாட் டும்மிடைந்த ஆய்விநோ தங்களுமே
நாட்டிலெல் லாநடக்கு நற்றேசி—தேட்டமுறு
சிங்காரப் பேச்சுஞ் செறுக்குநடைக் கைவீச்சும்
இங்கிதப் பாட்டுமுடன் எறியிடும்—மங்காதே
ஊடலொடு கூடல் உடனிருத்தல் என்றிவைகள்
விடலைத்து மேவி விளங்குமால்—தேடவரு
சிந்தா மணியே சிறந்தொளிரு மாமணியே
நந்தா மணியே நலமணியே—முந்தாரும்
அம்மணியே பொன்மணியே ஆய்மணியே இன்மணியே
செம்மணியே சீரார் செழுமணியே—இம்மையிலே
இல்லையெனச் சொல்லவுமோர் ஏதுவுண்டோ நீயிருப்பின்
தொல்லைநற் புண்ணியர்கொள் தோகையே—எல்லையிலா
இன்பப் பெரும்போகம் எய்துவிக்குந் தாயேநின்
அன்பெப் பொழுதுமுள தாயிடினே—துன்பமில்
பல்கோடி காவதங்கொள் பாரினெடுந் தூரத்தை
சொல்லாருஞ் சின்னாழி தோய்பொழுதில்—ஒல்லே
கடந்தேகச் செய்யுங் கடுவிசைகொள் தூமத்
தடந்தேருந் தந்தித் தபாலும்—நடந்தேக
ஒண்ணாப் பெருங்கடலில் ஓடிக் கடக்கச்செய்
எண்ணருங் கப்பல் இயல்வகையும்—ஒன்னார்முன்
காணா வகையாற் கரந்துநீ ருட்செல்லும்
மாணாரும் *டார்பிடோ மாண்படகும்—நீணாடு
தாக்க நிலங்கீண்டு சார்ந்ததரை மண்ணுள்ளே
போக்குவிசை வாம்வெம் பொறியினமும்—நீக்கமில்வான்
அண்டத்தை யும்முடைத்தே அற்புதயா னச்சென்று
விண்டத்தி வாவும் வியன்கலமும்—குண்டத்தி
ரங்கோடி சூழ்ந்த ரத்தோடித் தன்னூரின்
பல்கோடித் துண்டாப் பருஞ்சிரங்கள் வெங்காங்கள்

* Torpedo.



176022

வீழச்செய் விந்தை வியன் *பாம்புப் பாங்களும்
வீழத் திகைக்க விழிமாயத்—தாழவெம்
நச்சுப் புகையூட்டி நண்ணாரை நாசஞ்செய்
மெச்சும் பொறிவகையும் மீதகவா—வச்சிட
தந்தியின்றிச் சேதிசொலும் தக்கவை யந்திரமும்
சிந்திக்க நாணுஞ் செய்துவரு—பந்திரமும்
கோட்டையொடு கொத்தளங்கள் கோதில் படைகளுமே
கேட்டை யடைந்தொழியக் கேளொலிசேர்—வேட்டுடனே
குண்டுகுண் டாப்பலவாங் குண்டுவிடுத் தேயழிக்கும்
அண்டுபடாப் பீரங்கி யாமிவையும்—தண்டுபடாப்
பண்ணும் பலநூ தனப்பொருளும் பார்க்குங்கால்
உன்னுருவ நாணு வுறுப்பாக—மன்னிடவே
உன்செயலா லேவந்த ஓங்குபொரு ளென்றுகொலோ
இன்பப் பெரும்பிழம்பே இங்கிதமே—துன்னுபல
அண்டமெலாங் காத்தினருள்செய்யு மாரிறைவி
எண்டருநா ளூட்டும் எழிற்குருவே—கண்டபெரு
பாக்கணக்கர் பண்டிதர்கள் பாரவையில் முன்னிருக்க
ஆக்குவிக்கும் அன்பார்ந்த அப்பனே—காக்குமொரு
ஆவியொடு காயம் அணிவன்மை கொண்டோங்க
மேவியுண வூட்டும் மிகுதாயே—பூவினிடை
மெய்யின்ப மாக்கி மிகுபோக மேவினைக்குந்
துய்யதுன் னூலினிடைத் தோகையே—உய்யவொரு
நற்கதியை யூட்டி நவில்வலமாப் பின்குடியைப்
பொற்புடனே காத்திடலாற் புத்திரனே—உற்றுடனே
நின்று துயர்களைந்து நீர்மை நயந்திடலால்
ஒன்றிவரு மின்ற உயர்தோழா—என்றுமிதந்
தந்து படிகடவாத் தண்குழலைந் தான்தரலால்
வந்துபெண் ணீந்திடுநன் மாமனே—முந்துபல
வேடிக்கை செய்திடலால் வித்தகநன் மச்சானே
நாடிவரு மச்சினியே நற்கொழுந்தி—தேடிவரு
வெம்பகையை வீட்டியே வெற்றிமிகத் தந்திடலால்
நம்புமெய் காத்தருளும் நல்வீரா—இம்பரொரு

* Bomb.

நாணிலே புல்லரையு நாடுமதிக் கும்பெரிய
ஆணிலே சேர்த்தவரை ஆட்டுவிப்பாய்—தோணிலே
தோன்போட்டு நீங்காத தோழரையு மோரிமையில்
நீள்வேக நேர்பகையா நீயமைப்பாய்—நாள்கண்ட
எப்பகையை யும்மே இனிதெடுத்தே யுள்ளிரண்டும்
ஒப்பக் கலக்கவுற வூட்டுவையால் செப்பிடு
வித்தையெலாஞ் செய்வாய் வெகுவிநோ தஞ்செய்வாய்
எத்தைச் செயலரிதா யிங்குனக்கே—மெத்தவே
கண்ணைமூ டித்திறக்குங் காலத்துள் காட்டைநீ
நண்ணுநா டாக்குவாய் நல்லாயே—பெண்ணைபோர்
ஆணுடனும் ஆணைப்பெண் ணுடனுங் கூட்டுவதுந்
தோணுமுன் கூத்தன்றே தொல்லணங்கே—நாணுபெரும்
நட்டியோ எட்டினமட் டின்பணமோ பாதலத்தும்
நீட்டியே பாயுமென நீணுலகில்—நாட்டியே
எல்லோருஞ் சொல்லு மிருமொழியு மொன்றுண்டே
வல்லோரும் புல்லோரா மாநிலத்தில்—புல்லோரும்
வல்லோரா மிக்கு வயங்குவதும் வண்பொன்னே
நல்லோயே உன்றனுயர் நாடகமே—கல்லாத
துன்னுமடை யோனுந் துதிபெறுவ னுன்னருளால்
பன்னுகுலங் குப்பையிலே பற்றுபணம்—மன்னுபெரும்
பந்தியிலே என்று பகருமுது சொல்லுமுண்டே
சந்தியிலே விட்டிடுவாய் சார்துணையும்—வந்திடுவாய்
நந்தா வுயர்ஜாதி நன்னூரி யானாலும்
அந்தோ பெருநோய் அழிபறைபோ—டுந்தாலு
வந்தே பிணங்கி மருவினனி வாழவு
வந்தே புரிந்திடுவாய் மாதின்றி—செந்தேனே
நல்லுயிர்மே லாசை நனிபார்க்கு மென்றாலும்
கொல்லும் படைசுமந்து கோபமொடு—வெல்லவெளிப்
போர்க்களத் துச்சென்று போராளா நின்றுயிரை
வேர்க்க விடுவதுநின் மேல்விழைவே—ஆர்க்குமலைப்
போழி தன்னிற் பிழந்திணைத்த புன்சிறும்ப
சோரக நம்பி செடுந்தூரம்—கூரக



ஆறுநு மாச்சங் கவதியொடு விணுகப்
போனாலும் போச்சு புரிதவமே—தானு
நிரைதிட்ட நோட்டும் நின்றூரார் மண்மேற்
றிரைகடலைத் தாண்டித் திரவ்யம்—நிறைபவே
தேடென்ற வெளவைமொழி சீரியதே என்றுகொடு
கூடென்ற யாக்கை குறித்துறையும்—பாடொன்று
நல்லுயிரை யும்வெறுத்து நாளுஞ்சென் றேதிரிவ
ரொல்லளவு முன்னை யுறவலவோ—நல்லதிருத்
தாயே தயாநிதியே தண்ணளியே யுன்பேரை
ஏயே யொருக்கா லிசைத்திட்டால்—வாயே
திறந்துபிண மும்வருமே சித்திக்கு முன்பேர்
மறந்திருக்கக் கூடுமோ மானே—திறந்தெரிந்தே
தெய்வத் திருப்புலமைத் தேசுபெரு வள்ளுவரும்
மெய்வைத்த தன்னூலில் மேதகவாச்—செய்ய
பொருளிலார்க் கிவ்வுலகில் பூணவெனக் காட்டித்
தெருளுறவே பின்னுந் தெரிய—அருளென்னு
மன்பீன் குழவி யதுவுண்டே நற்பொருளென்
இன்பார் செவிலியா லென்றருளி—முன்னுகச்
சொன்னவெலாந் தொல்லணங்கே சொர்ணச் செழும்பா
உன்னருமை தேர்ந்த வுணர்வன்றோ—இன்கமல [வாய்
மீதுறையுஞ் சாமி விழைவாணிக் கோர்மாமி
நீதுதவிர்த் தானேமித் தேகாமி—ஓதுவனப்
பன்றி மலையிடத்தும பண்பாருஞ் சம்புநதி
துன்றுதீ ரத்துந் துகளின்றி—பொன்றுபெருஞ்
சாளக் கிராமத்துஞ் சார்ந்துமுன நீபிறந்தாய்
நீளவனு மேருக்கள் நேர்ந்திருப்பன்—கேளித்தூன்
தன்னினுமே வேண்டிற் றனிவருவ னென்றுபின்னை
சொன்ன மொழிப்படியே சோதனையா—மன்னுபெரு
சிங்கமா வந்தமால் சிந்தைக்கு நேயினிக்குந
தங்கமே புங்கமே சங்கமே—எங்குமா
போதப் பொலிந்திருக்கும் பொற்பார் புனிதையே
வேதப் பிரமன் வியன்றூயே—ஓதக்

கடல்கடைந்த வந்நாளிற் கண்டோர் களிக்க
அடல்கொண் டெழுந்ததிரு அம்மே—விடலரிய
விண்ணாட்டி னேற்றம் விளம்புங்காற் பெண்ணேநீ
கண்ணாட்டி யிட்ட கருணையன்றோ—எண்ணாட்டுஞ்
சங்கநிதி யோடு சாற்றுபெருந் தண்பதுமப்
புங்க நிதிதானும் பூவையே—தங்குமுன்
பேருருவ மன்றோ பெரிதான வைந்தருவின்
சாருருவ தேனுசிந் தாமணியும்—நேருமுன்பூப்
பாதத்தைப் பற்றிப் பரவிப் பயனடைந்து
போதத் தருஞ்செயலைப் பூண்டனவால்—நீதற்ற
மாலுமால் கொண்டு மணிமார்பி லையணிந்த
காலுமொளித் தெய்வக் கவுத்துவமும்—காலுவகைச்
சேனைத் திரளுடைய செய்யவைந்தாஞ் ஜார்ஜரைக்*
கோனைத் திருமுடிமீக் கொண்டிருந்து—மானைவாட்
டும்புலிபோல் சத்துருவெ டும்படையைத் தாக்கியே
அம்புவியிற் கீர்த்திமிக ஆக்குவிக்கும்—இம்பரொளிர்
†கோகினூ ரென்னுங் குணமணியுங் கூறினரு
ளாகிவிளங் குன்னிருகண் ணாகுமால்—போகியே
வங்கணமே யம்பணமே மன்னுநிருக் காணமே
துங்கவருட் டேவர்தந் தூமுடிமேல்—தங்கியொளிர்
பேரொளியே பேராசைப் பெட்டகமே பேரிசையே
பாரொளித்திங் கீட்டும் பருப்பொருளே—வாரொளிகொள்
பூமணியே தூமணியே பூதலத்தார் புண்ணியமே
காமணியா வேத்து நலப்பொருளே—சேமமுறு
நல்லுயிரே காம நறும்பொருளே செங்கனக
வல்லியே மாணிக்க வல்லியே—மெல்லியே
நீலமணி வல்லியே நீள்ராக வல்லியே
கோல வெழிலமைந்த கோமளமே—சாலவெழில்
கொண்டமின்னா ராசைக் குலவுமொரு கொள்கலமே
அண்டர்க ளும்மேத்து மாரமுதே—ஒண்டவரும்
கண்டு களிக்குங் கருந்தனமே முந்தனமே
விண்டுதுதி செய்யும் வியன்விளக்கே—விண்டுதித்

* George V. †Kohinoor.



துன்புகழே பேசு மொருயா னுனதடிமை
உன்னதமா மின்புதரு முன்னருளும்—உன்மருவி
நல்லருளும் பெற்று நளிர்கடல்சூ ழிவ்வுலகில்
வல்லபெரு காவலனென் வண்பேருஞ்—சொல்லும்
அமிர்தகவிச் சிங்கமெனு மாம்பட்ட முங்கொள்
அமிர்தப்பே ராள னமைய—இமிரன்பிற்
றந்த புதல்வனுத் தாரணியில் வந்துற்றேன்
இந்தி னிளம்பிள்ளை ஏற்றசடைச்—சுந்தரனென்
கந்தரநீ லப்பெருமான் கான்மலர்கே யப்பெரியோர்
சுந்தரநா தப்போர் சொலச்சுமந்தேன்—முந்துறவே
தந்த பலப்பிறப்பிற் சார்ந்துற்ற நன்றேன்பால்
கந்தவெண் டாமரையின் கண்ணருணோர்க்—தந்தமிழைக்
கற்றுப் புலவனெனக் காசினிசொல் லும்பேரைப்
பெற்றுப் பிறங்குகின்றேன் பேருலகில்—பொற்கொடியே
மற்றுன் திருவருளின் மாத்திரையும் பெற்றுசுக
முற்றுவரு கின்றேன் முறையாக—நற்றவத்தால்
ஞானக் களஞ்சியமாய் நண்ணுலகப் பேறுன
மோனநிலை கைவந்த மூதறிஞர்—மானபெரும்
அன்புரு வான வமல னருளிடத்தே
இன்புருவா நின்ற இறைவியின்—மன்பெருகும்
ஏற்றமெலாங் கூற இருசெவிக்கு மின்னமுதாய்
சாற்று முடல்புளகஞ் சாரவே—தோற்றமிகு
கண்களிலே நீர்வாரக் கம்பலையுங் கொண்டுள்ளம்
மண்டுகளி யேறமென் வாய்குழறப்—பண்டுதவம்
வந்தெய்தி னாப்போல் வளம்பெருகி மெய்மறந்து
சிந்தைதெளிந் தேநான் சிந்தித்தேன்—வந்தித்தேன்
அந்தநா டொட்டே யரும்பதிக ளுள்ளவெலாம்
உந்துபே ராவ லுறத்திழுக்கச்—சிந்தையொடு
சென்றுகண் டேதொழயான் சிந்தித்து முன்னடந்தேன்
அன்று புகழ்ப்பொன்னித் தூநதிக்கண் நன்றுவரு
மிக்கபுனல் வெள்ளத்தால் வேண்டிவரு தாய்வருந்தி
அக்கரையில் நிற்க வமைதாயாய்—இக்கரையில்

தானேயத் தாயாய்த் தனிமருத்து வம்பார்த்த
கூனேய் பிறைச்சடையான் கோயிலெனும்—வானேடு
நல்ல சிராமலைக்கண் நான்சென்று கைகுவித்து
மல்ல லெழிற்றாயு மானவன்றன்—நல்லமலர்
வண்பதமும் எங்களனை மட்டுவார் கூந்தலுமை
ஒண்பதமுங் கும்பிட்டே யுண்மகிழ்ந்தேன்—திண்ணியசெல்
அத்திபூ சித்த அரும்பதிக்கண் ணேசென்று
பத்தியாற் பாடிப் பரவியே—உத்தியர்ல்
ஆய்ந்த கயிலாண்ட வம்மையையு மன்பாக
ஏய்ந்தவெண் ணாவலி னின்னிழலிற்—றேய்ந்தமரும்
மாதே வனையும் வணங்கி யடிதொழுது
நீதேசெய் யாக்கோழித் தேவனையும்—போதே
எனக்கினிய மாமுகத் தின்னிசைய வல்லி
கனக்குமறைச் சொற்பதமுங் கண்டே—மனக்கமைய
போற்றித் தொழுதேன் பொருந்தவினுங் காணவெணி
சாற்றிற் பவமோட்டுஞ் சத்திமிக—ஏற்றுள்ள
வானோங்கு சோலை வளமதுரை சென்றங்கே
மீனோங்கு கண்ணி யியன்றாளுங்—கானோங்கு
வேப்பந் தொடைமுடித்த மேதகுசொக் கேசன்றன்
மாப்பைந்தாட் போதும் வணங்கினேன்—தூப்பெரிய
நெல்லை யமர்ந்தருளு நெல்வேலி நாதனையு
முல்லை நிகர்நகையாள் மொய்குழலாள்—எல்லையிலா
வண்ணவெழிற் காந்தி மதியுமையை யுந்தொழுதேன்
எண்ணுந் திருத்தில்லை ஏற்றமிகும்—நண்ணுபெரு
சீர்க்காஞ்சி குற்றாலஞ் சீர்காழி புள்வேளூர்
நேர்க்கோயி லெல்லா நினைந்தேகி—சேர்க்கரங்கள்
கூப்பி யுளமுருகிக் கோலக்கண் ணீர்வார
காப்பயிலுந் தோத்திரங்கள் நன்கோதி—மீப்பாவி
ஓடுங் கனியோடு மோங்குபே ரன்போடுந்
தோடுஞ் செறிபொடியுந் தொல்லரவு—மாடுங்கொள்
பெம்மானை யம்மான் பெரும்பாகத் தேயொளிரும்
அம்மானைக் கண்டங் கடிபணிந்து—வெம்மாய



பொல்லா வுலகிற் புலன்கெட் டழியாமே
வல்லானே வல்லாள்வாழ் வாமாவோ—ஒல்லேனீர்
பேரறிவு செல்வம் பெருவாழ்வு மென்றனக்கு
கோரியத் தந்தருண்மின் நேசித்தே—சீரநாற்
பாவும் பலகலையும் பற்றுபிர சங்கமு
மேவும் படியருண்மின் மேதக்கீர்—ஏவுபெரு
மாடுடையீர் மானுடையீர் மற்றுமடி யார்க்கருளும்
வீடுடையீ ரென்று விளம்பியே—நாடுபல
நாள்களித்து வாழ்ந்துவரு நாளிலொரு நாட்கனவில்
வாள்புரையுங் கண்ணாள் மலைமகடான்—தாள்விரிந்த
பூவொத்த தன்பாதம் போக்கெனது கண்ணிணைக்கம்
மாவொத் தலர்ந்து மகிழூட்டக்—காவொத்த
கூந்தற் பெருங்காடுங் கூர்ந்த மதிமுகமும்
ஏந்திரண்டு பொன்மலையென் னின்முலையும்—காந்துமெ
மின்னிடையுங் கொண்ட மிகுபே ரெழிலுருவோ [ழின்
டுன்னரிய ஜோதி யொளிர்மயமாய்த்—துன்னுபெரு
செங்கதிரின் முன்னிருள்போற் சேர்பவமெல் லாமோட
இங்கிதகோ லங்காட்டி யென்னெதிரிற்—றங்கிநின்று
கைக்குழவி தன்னைக் கருணைத் திருவன்னை
மைக்கருங்கண் ணால்நோக்கு மாண்பதுபோல்—மெய்க்கருணை
பாயத் திருக்கண்ணாற் பார்த்துப்பின் சென்றிட்டாள்
நேயத் திருத்தாயே நின்மலையே—மாயத்தால்
புன்னாயேன் முன்வந்து பூங்கமலக் கண்சாத்தி
என்னை பிரிந்திட்டாய் எம்மிறைவி—என்னேயெல்
லாமிசைத்து வேண்டுவவெல் லாங்கேட்க மாட்டாதே
சாமியுனைக் கண்டமகிழ் தன்னாலே—நேமியமாச்
சும்மா விருந்திட்டேன் சுத்தமறை யுங்காணு
அம்மா வினிக்காண வாமாவெம்—பெம்மானை
அம்பலத்தி லாட்டியே ஐந்தொழிலு மாக்குவிக்கும்
அம்பலத்தி செம்பலத்தி யாரத்தி—செம்பதும
மாமுகத்தி என்று மனமுருகி யேகத்திப்
யாமுகத்தாற் போற்றிப் பரவியுமே—பூமுகத்தில்

இன்றொருகால் வந்துதிரு வின்னுருவங் காட்டாதே
பின்முனதி யார்போலப் பேசாமே—மன்னதிந்த
தேவியிருக் கின்றாள் இகமுஞ் சராசரங்கள்
மேவியிருக் கப்படைத்த மேதகையாள்—பாவிமனம்
வாடிப் பதைக்கின்றேன் மற்றும் வழியறியா
தோடித் திரிகின்றே னோர்வழியு—நாடியெனக்
குச்சொல்வா ரில்லையிக் குச்சொல்லி னென்பயனே
மெச்சென் றமிழ்க்கு விலையாக—உச்சிதநல்
அம்பல வாண அருட்குருமன் றந்தளித்த
செம்பதுமப் பொன்னே திருவேயுன்—பிம்பவொளி
கண்டு தெளிந்தேன் கருதுவழி யுங்கண்டேன்
தொண்டுசெய்தஞ் சங்கரிக்குத் தொன்முறைபா—கண்டுநிக
ரின்மொழிகூ றிச்செய்யு மின்னணங்கு நீயதனால்
பன்னுமொரு தூதாப் பணையிட்டு—முன்னமுனை
யானனுப்ப விச்சித்தேன் யாதுந் தடைசொல்லே
னூனமில்லா திங்கே யுனையன்றிக்—கூனல்வெண்
பிள்ளைப் பிறைச்சடையான் போராட்டி தன்பாலே
மெள்ளப்போ தற்கா ரிரகுடையார்—ஒள்ளணங்கே
தத்தைதனைத் தூதாத் தனிவிடுப்பின் றான்சென்று
முத்தை நிகர்நகையாள் முன்னின்றே—உத்தமியாள்
இக்குமொழி கேட்டுடனே யின்பமுறத் தான்பயில
புக்கவிருந் துவிடும் பொற்காஞ்சே—ரக்கினிபால்
நேயம் படைத்திடுமேல் நீளப்பின் மீளாதே
மாயன் திருத்தங்கை மாதேவிக் கேயவொரு
பூங்குயிலைத் தூதாகப் போக்கிடுவோ மென்றாலோ
தாங்கிப் பயந்தவொரு தன்றாய்க்கும்—பாங்குடனே
சேர வடைகாத்துச் சிங்காரக் குஞ்சாக்கித்
தேர வளர்த்த செவிலிக்கும்—நேரவிலுந்
தாறுதவாத் தன்மை தனைநினைந்தே பின்னிட்டேன்
வாறுகுவ வண்டோ மலைமகடன்—றேனுறுபூங்
கந்தன் மணமார்ந்திக் கொண்ட பணிமறக்கும்
ஏந்துமலர்க் கள்ளுண்டா லெங்குரைக்கும்—காந்திமிகு



நீலநிறத் தேவி நிமலியிட மென்னெஞ்சைக்
கோலமிகு தூதாக் குறித்தனுப்பின்—பாலடுத்துப்
பின்திரும்பா வங்கைப் பிடித்துடும்பு நிற்பதென
நன்றிதுவென் றங்கிருந்து நன்குணர்ந்து—தன்றிவரு
மேகத்தைத் தூதாக்கின் மேருமலை வில்லான்றன்
ஆகத்தைப் பங்கிட் டதிலமையும்—ஏகத்
திருத்தேவி கூந்தற் றிறமதற்குத் தோற்றே
கருத்தாகக் காவிற் கலந்தே—உருத்தேர
சாகரத்தைப் பூதரத்தைச் சாருவதா லெவ்வாறு
ஏகமனங் கொள்ளுமவ் வேந்திழைபால்—சோகமறப்
பொன்னே புகழ்ப்பாவாய் பொற்றிருவே புத்தமுதந்
தன்னோ டெழுந்த தனித்தேவி—இன்னேயான்
உன்பாதங் கும்பிடுவே னுற்றெனக்கு நீதூதாய்
பொன்மா மலையின்ற பூவையிடம்—இன்னினிபே
போவாய் புகழ்வாய்நான் புத்தியொடு பத்தியெழில்,
பாவாய் கவித்திறமும் பல்வளமும்—நாவார்ந்த
சொற்றிறமுஞ் சொர்ணத் திருவளமு நற்சுகமும்
மற்றனைவும் பெற்றிந்த மாநிலத்தில்—கற்றறிந்த
நல்லோர்கொண் டாடு நயமெய்தி வாழ்ந்திருக்கச்
சொல்லோர்ந்து தோதிவா ரூழ்ந்து.

அ. சுந்தரநாதன்.

பொன்விடுதூது முற்றிற்று.

## வாழி-வெண்பா

வாழி துறைசைக்கண் வாழும் பலவாணன்
வாழி யவன்கருணை மாநிலத்தே—வாழ்மழை
வாழிதிரு நான்மறைகள் வாழியடி யார்களுமே
வாழிதமிழ்த் தேவும் வளர்த்து.

அ. சுந்தரநாதன்.

176022

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 6 | அய்ய நலக்குரவன் | அய்ய நயவரன் |
| 7 | 2 | அன்னியவவென் | அன்னியவேன் |
| ,, | 9 | புரியிந்திர | புரியிந்த்ர |
| 11 | 27 | பொன்மணியென | பொன்மணியென் |
| 12 | 11 | வொன்வெள்ளி | ஒன்வெள்ளி |
| ,, | 14 | கூறபல | கூறுபல |
| ,, | 21 | வாரளக்கும் | வாறளக்கும் |
| 13 | 18 | புறட்டில்லை | புரட்டில்லை |